ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ருதி₃ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ வாரணமாயிரம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ வாரணமாயிரம் ‖

மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட தூயநற் கனைவைத் தோழிக் குரைத்தல்

‡வாரணம் ஆயிரம்⋆ சூழ வலஞ்செய்து⋆
நாரண நம்பி⋆ நடக்கின்றான் என்றெதிர்⋆
பூரண பொற்குடம்⋆ வைத்துப் புறம் எங்கும்⋆
தோரணம் நாட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (1)

நாளை வதுவை⋆ மணம் என்று நாள் இட்டு⋆
பாளை கமுகு⋆ பரிசுடைப் பந்தற் கீழ்⋆
கோளரி மாதவன்⋆ கோவிந்தன் என்பான் ஓர்⋆
காளை புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (2)

இந்திரன் உள்ளிட்ட⋆ தேவர் குழாம் எல்லாம்⋆
வந்திருந்தென்னை⋆ மகள் பேசி மந்திரித்து⋆
மந்திரக் கோடி உடுத்தி⋆ மண மாலை⋆
அந்தரி சூட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (3)

நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து⋆ நனி நல்கி⋆
பார்ப்பனச் சிட்டர்கள்⋆ பல்லார் எடுத்தேத்தி⋆
பூப் புனை கண்ணிப்⋆ புனிதனோடென் தன்னை⋆
காப்பு நாண் கட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (4)

கதிர் ஒளி தீபம்⋆ கலசம் உடன் ஏந்தி⋆
சதிர் இள மங்கையர் தாம்⋆ வந்தெதிர் கொள்ள⋆
மதுரையார் மன்னன்⋆ அடி நிலை தொட்டெங்கும்⋆
அதிரப் புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (5)

மத்தளம் கொட்ட⋆ வரி சங்கம் நின்றூத⋆
முத்துடைத் தாமம்⋆ நிரை தாழ்ந்த பந்தற் கீழ்⋆

www.prapatti.com

மைத்துனன் நம்பி⋆ மதுசூதன் வந்தென்னைக்⋆
கைத்தலம் பற்றக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (6)

வாய் நல்லார்⋆ நல்ல மறை ஓதி மந்திரத்தால்⋆
பாசிலை நாணல் படுத்துப்⋆ பரிதி வைத்து⋆
காய் சின மா களிறன்னான்⋆ என் கைப் பற்றி⋆
தீ வலஞ்செய்யக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (7)

இம்மைக்கும்⋆ ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்⋆
நம்மை உடையவன்⋆ நாராயணன் நம்பி⋆
செம்மை உடைய⋆ திருக் கையால் தாள் பற்றி⋆
அம்மி மிதிக்கக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (8)

வரி சிலை வாள் முகத்து⋆ என் ஐமார் தாம் வந்திட்டு⋆
எரி முகம் பாரித்து⋆ என்னை முன்னே நிறுத்தி⋆
அரி முகன் அச்சுதன்⋆ கைம்மேல் என் கை வைத்து⋆
பொரி முகந்தட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (9)

குங்குமம் அப்பிக்⋆ குளிர் சாந்தம் மட்டித்து⋆
மங்கல வீதி⋆ வலஞ்செய்து மண நீர்⋆
அங்கவனோடும்⋆ உடன் சென்றங்கானை மேல்⋆
மஞ்சனம் ஆட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (10)

‡ஆயனுக் காகத்⋆ தான் கண்ட கனாவினை⋆
வேயர் புகழ்⋆ வில்லி புத்தூர்க் கோன் கோதை சொல்⋆
தூய தமிழ் மாலை⋆ ஈர் ஐந்தும் வல்லவர்⋆
வாயுநன் மக்களை பெற்று⋆ மகிழ்வரே (11)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com